©
தமிழ்நாடு அரசு
2017

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை : ரூ. 2.40 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 24] சென்னை, புதன்கிழமை, ஜூன் 14, 2017
வைகாசி 31, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு–2048

## பகுதி II—பிரிவு 2 இன் இணைப்பு

### அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

**தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை**

**அறிவிக்கைகள்**

*[அரசாணை (2D) எண் 23, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1)த் துறை, 10 ஏப்ரல் 2017.]*

1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதி, 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவு ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் வெளியிடக் கருதிய பின்வரும் அறிவிக்கையின் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் கோரியுள்ளவாறு, அதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக இதனால் வெளியிடப்படுகிறது.

2. இந்த வரைவு அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து இரண்டு திங்கள் முடிவடைந்த நாளன்று அல்லது அதற்குப் பின்னர் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படுமென்றும், மேற்சொன்ன கால அளவான இரண்டு திங்கள் முடிவடைவதற்கு முன்னர், ஏதேனும் நபரிமிருந்து வரப்பெறுகிற ஏதேனும் மறுப்புரையை அல்லது கருத்துரையை தமிழ்நாடு அரசு பரிசீலிக்கும் என்றும் இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை எவையேனும் இருப்பின், அவற்றை, சென்னை–600 006 இல் உள்ள தொழிலாளர் நல ஆணையர் மூலமாக, அரசு செயலாளர், தொழிலாளர் – வேலைவாய்ப்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை – 600 009 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

**வரைவு அறிவிக்கை**

1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதி, மேற்படி சட்டத்தின் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவு ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 31–10–2012 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II பிரிவு 2இல், 575 – 576 ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II(2)/LE/725/2012 ஆம் எண்ணுள்ள தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அறிவிக்கையை ரத்து செய்துவிட்டு அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், கீழேயுள்ள விவர அட்டவணையின் (2) நெடும்பத்தியில் குறிப்பிட்டுள்ள தமிழ்நாடு மாநிலத்தில் ஊதுவத்தி தயாரிக்கும் தொழிலில் உள்ள பணியாளர்களின் வகையினருக்கு வழங்க வேண்டிய குறைந்த அளவு ஊதிய வீதங்களை, அந்த விவர அட்டவணையின் (3) நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார்.

## விவர அட்டவணை

## ஊதுவத்தி தயாரிப்புத் தொழிலில் வேலைவாய்ப்பு

| தொடர் எண் | பணியாளர்களின் வகைகள் | குறைந்த அளவு ஊதிய வீதங்கள் (மாதமொன்றுக்கு) | | | |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | | | |
| | | மண்டலம்—A | மண்டலம்—B | மண்டலம்—C | மண்டலம்—D |
| | | (i) | (ii) | (iii) | (iv) |
| | | ரூ. காசு. | ரூ. காசு. | ரூ. காசு. | ரூ. காசு. |
| I | **தயாரிப்புப்பிரிவு :** | 5211.00 | 5125.00 | 5037.00 | 4950.00 |
| | (1) செப்பமுறா வத்திகளைச்சுற்றுதல் (தொழிற்சாலைகளில்) | | | | |
| 1. | (2) (a) சிப்பம் செய்தல் | 5299.00 | 5211.00 | 5125.00 | 5037.00 |
| | (b) சிப்பம் செய்தல் (வாசனை திரவத்தைத் தெளித்தல் அல்லது வாசனை திரவத்தில் முக்குதல் உட்பட) | 5631.00 | 5525.00 | 5430.00 | 5334.00 |
| II | **நிருவாகப்பிரிவு** | | | | |
| | 1. தட்டச்சர் | 5256.00 | 5169.00 | 5080.00 | 4994.00 |
| | 2. எழுத்தர் | 5229.00 | 5141.00 | 5055.00 | 4967.00 |
| | 3. மேற்பார்வையாளர் | 5299.00 | 5211.00 | 5125.00 | 5037.00 |
| | 4. மேலாளர் | 5648.00 | 5474.00 | 5235.00 | 5299.00 |
| | 5. ஓட்டுநர் (மோட்டார்) போக்குவரத்து தொழிலாளர்கள் சட்டத்தில் தொழிலாளர் என்ற பொருள் விளக்கத்தின் கீழ் வருகிற ஓட்டுநர்கள் தவிர) | 5474.00 | 5387.00 | 5299.00 | 5211.00 |
| | 6. காவலாள் அல்லது அலுவலக உதவியாளர் அல்லது சிற்றேவலர் அல்லது ஏவலாள் | 4950.00 | 4862.00 | 4820.00 | 4767.00 |
| III | **விற்பனைப்பிரிவு** | | | | |
| | (a) விற்பனைப் பணியாளர் | 5299.00 | 4950.00 | 4775.00 | 4601.00 |
| | (b) உதவி விற்பனைப் பணியாளர் | 4950.00 | 4862.00 | 4820.00 | 4775.00 |
| IV | **ஏனைய வகையினர்:** | 4950.00 | 4862.00 | 4820.00 | 4775.00 |
| | மேற்சொன்னவற்றின் கீழ் வராத ஏனைய பணியாளர் வகையினர் | | | | |
| V | செப்பமுறா வத்திகளைச் சுற்றுதல் (வீட்டுவேலை செய்பவர்களுக்கு) (a) 6" வரை செப்பமுறா 1000 வத்திகளைச்சுற்றுவதற்கு | 37.67 | 36.61 | 35.53 | 34.44 |
| | (b) 6" மேற்பட்ட செப்பமுறா 1000 வத்திகளைச்சுற்றுவதற்கு | 46.28 | 45.22 | 44.14 | 43.06 |

**குறிப்பு:** மண்டலங்களின் வகைப்பாடு வருமாறு:

மண்டலம்—A: அனைத்து மாநகராட்சிகள்

மண்டலம்—B: அனைத்து நகராட்சிகள்

மண்டலம்—C: அனைத்து நகரியங்கள், பேரூராட்சிகள் மற்றும் பாளையங்கள்

மண்டலம்—D: மண்டலம் A,B மற்றும் C—யில் வராத ஏனைய பகுதிகள்

**விளக்கங்கள்:**

(1) **<u>அகவிலைப்படி</u>** : (தொழிலகப் பணியாளர்களுக்கு இணையாக வீட்டில் வத்தி சுற்றுகிற பணியாளர்களுக்கு) 1000 வத்திகளை சுற்றுவதற்கு ரூபாய் 34.55 என்ற வீதத்தில் அகவிலைப்படி கணக்கீடு செய்யப்படும். இருப்பினும் நாளொன்றில் சுற்றப்படுகிற வத்திகளின் எண்ணிக்கை 3000–க்கு மேற்பட்டாலும் கூட அதிகளவு அகவிலைப்படி, ரூபாய் 103.65க்கு மேற்படக்கூடாது.

**அகவிலைப்படி** : (தொழிலகப்பணியாளர்களுக்கு)

(i) அகவிலைப்படி, 2010 ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது (அதாவது 2001 ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு தற்போது கணக்கிடப்பட்ட 161 புள்ளிகள் ஆகும்). 161 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் அகவிலைப்படி மாதமொன்றுக்கு ரூ. 28.55 (இருபத்து எட்டு ரூபாய் ஐம்பது ஐந்து) காசுகள் மட்டும்) கூடுதலாக அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(ii) முந்தைய 12 மாதங்களுக்கான (அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை) நுகர்வோர் விலைப்புள்ளிகளின் சராசரியை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வோரு ஆண்டும் ஏப்ரல் முதல் நாளிலிருந்து அகவிலைப்படி கணக்கிடப்பட வேண்டும்.

(iii) முதல் கணக்கீடு, முந்தைய ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் விலைப்புள்ளிக் குறியீட்டு எண்ணின் சராசரியை அடிப்படையாகக் கொண்டு, இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

(iv) நாள் ஊதியத்தைக் கணக்கிடுவதற்கு, மாத ஊதியத்தை 26 ஆல் வகுக்க வேண்டும்.

(v) பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும்போது, ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் எவ்வித வேறுபாடும் இருக்கக்கூடாது.

(vi) தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களிலெல்லாம் அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

P**. அமுதா,**
*அரசு செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (2D) எண் 24, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1)த் துறை, 10 ஏப்ரல் 2017.]*

1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியிலும், 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, வெளியிடக் கருதியுள்ள கீழ்க்காணும் அறிவிக்கையின் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் கோரியுள்ளவாறு, அதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக இதனால் வெளியிடப்படுகிறது.

2. இந்த அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து இரண்டு திங்கள் முடிவடையும் நாளன்று அல்லது அதற்குப் பின்னர் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுமென்றும், அது தொடர்பாக மேற்சொன்ன கால அளவு முடிவடைவதற்கு முன்னர், எவரிடமிருந்தேனும் வரப்பெறுகிற மறுப்புரை அல்லது கருத்துரை தமிழ்நாடு அரசு பரிசீலிக்கப்படுமென்றும் இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின் அவற்றை, சென்னை–600 006 இல் உள்ள தொழிலாளர் நல ஆணையாளர் மூலம், அரசு முதன்மைச் செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை – 600 009 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

**வரைவு அறிவிக்கை**

1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியிலும், 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 04–09–2013 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II பிரிவு 2இல், 606 மற்றும் 607 ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II(2)/LE)/685/2013 ஆம் எண்ணுள்ள தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அறிவிக்கையை ரத்து செய்துவிட்டு அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு மாநிலத்தில் துணி ஆலைகளில் தனியாக அல்லது ஒன்றாகச் சேர்ந்து பணிமேற்கொள்ளப்படுகிற ஆலைகள் நெசவாலைகள் நூற்பாலைகள் முன் வரையற்ற ஆலைகள், உட்பட துணி ஆலைகளில் பஞ்சடிக்கும் அறை சிக்கெடுத்தல் நூலாக இழுத்தல், கைவிசை சட்டங்கள், நூற்றல், நூலிழைத்தல், முறுக்கேற்றுதல், சுற்றுதல், சிப்பம் செய்தல், பாவு போடுதல் போன்று மேற்சொன்ன ஆலைகளில் பல்வேறு செயல்முறைகளிலும் துணி ஆலைகளில் ஏனைய செயல்முறைகளிலும் பணியமர்த்தப்பட்டுள்ள தொழில் பழகுநர்களுக்கு வழங்கத்தக்க குறைந்த அளவு ஊதிய வீதங்களை, நாளொன்றுக்கு ரூ.261.00 (ரூபாய் இருநூற்று அறுபத்து ஒன்று) + விளக்கத்தில் வகை செய்துள்ளவறான அக விலைப்படி என இதனால் திருத்தியமைக்கிறார்.

**விளக்கங்கள்: (1) அகவிலைப்படி:** மேலே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு அடிப்படை ஊதியங்களுடன் பணியாளர்களுக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அகவிலைப்படி வழங்கப்படவேண்டும்:

(i) அகவிலைப்படியானது 2010 ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது (அதாவது 2001 ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு தற்போது கணக்கிடப்பட்ட 161 புள்ளிகள்). 161 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் திங்களொன்றுக்கு ரூ. 01.60 (ரூபாய் ஒன்று அறுபது காசுகள் மட்டும்) கூடுதலாக அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(ii) முந்தைய 12 மாதங்களுக்கான (அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை) சராசரி விலைக்குறியீட்டினை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் முதல் நாளிலிருந்து அகவிலைப்படி கணக்கிடப்பட வேண்டும்.

(iii) முந்தைய ஆண்டிற்கான நுகர்வோர் சராசரி விலைக் குறியீட்டு எண்ணை அடிப்படையாகக் கொண்ட முதல் கணக்கீடு, இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

(2) பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும்போது, ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் எவ்வித வேறுபாடும் இருக்கக்கூடாது.

(3) மாதாந்திர ஊதியத்தைக் கணக்கிடுவதற்கு, நாள் ஊதியத்தை 30 ஆல் பெருக்க வேண்டும்.

(4) தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களிளெல்லாம் அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**ப. அமுதா,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (நிலை) எண் 95, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (G1)த் துறை 15 மே 2017.]*

தமிழ்நாடு, 2017 ஆம் ஆண்டு பிழைப்பூதியப்படி வழங்கல் (திருத்தம்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/2017) 1 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், 15–05–2017 ஆம் நாளை, மேற்சொன்ன சட்டம் செயலுக்கு வரும் நாளாக இதனால் நிர்ணயிக்கிறார்.

**பி. அமுதா,**
*அரசு செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (நிலை) எண் 98, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (I2)த் துறை 16 மே 2017.]*

தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பு முறைப்படுத்துதல் மற்றும் பணி நிபந்தனைகள்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 33/1982), 4 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர், ஆலோசனைக் குழுவுடன் கலந்தாலோசித்த பின்னர், தமிழ்நாடு 1994 ஆம் ஆண்டு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (கட்டுமானத் தொழிலாளர்கள்) நலத்திட்டத்தில் பின்வரும் திருத்தத்தை, இதனால் செய்கிறார்.

**திருத்தம்**

மேற்சொன்ன திட்டத்தில், 17 ஆம் பகுதிக்குப் பின்னர், பின்வரும் பகுதி சேர்க்கப்பட வேண்டும், அதாவது:–

“17 – A அபராதம்:– (1) சட்டத்தின் கீழ் அல்லது இந்தத் திட்டத்தின் கீழ் ஏதேனும் தொகை செலுத்துவதைத் தவிர்ப்பதற்காக ஏதேனும் வேலையளிப்பவர் அல்லது அத்தகைய தொகை செலுத்துவதைத் தவிர்ப்பதற்காக ஏதேனும் வேலையளிப்பவர் ஒருவருக்கு உதவுவதற்காக ஏதேனும் தவறான அறிக்கையை அல்லது தவறான முறையீட்டை அளிக்கிற அல்லது அளிப்பதற்குக் காரணமாக

ஏதேனும் நபர் இருப்பாரேயானால் அவர், முதல் தடவை எனில், ஐநூறு ரூபாய் வரையிலான அபராதம் அல்லது மூன்று மாதங்களுக்கு மேற்படாத கால அளவிற்கு சிறைத்தண்டனை விதித்து தண்டிக்கப்படத் தக்கவராவார். இரண்டாவது முறை அல்லது அடுத்த முறை குற்றத்தை செய்கிற நேர்வில், ஆயிரம் ரூபாய் வரையில் அபராதம் அல்லது ஆறு மாதங்களுக்கு மேற்படாத கால அளவிற்கு சிறைததண்டனை விதித்து தண்டிக்கப்படத் தக்கவராவார்.

(2) இத்திட்டத்தில் ஏதேனும் விதித்துறைகளை மீறுகிற அல்லது இணக்கமாக செயல்படத் தவறுகிற வேலையளிப்பவர் ஒருவர், அவ்வாறு மீறியதற்காக அல்லது இணக்கமாக செயல்படாததற்காக ஐநூறு ரூபாய் வரையில் அபராதம் விதித்து அல்லது மூன்று மாதங்களுக்கு மேற்படாத கால அளவிற்கு சிறைத்தண்டனை விதித்து தண்டிக்கப்படத் தக்கவராவார். இரண்டாவது முறை அல்லது அடுத்த முறை குற்றத்தை செய்கிற நேர்வில், ஆயிரம் ரூபாய் வரையில் அபராதம் விதித்து அல்லது ஆறு மாதங்களுக்கு மேற்படாத கால அளவிற்கு சிறைத்தண்டனை விதித்து தண்டிக்கப்படத்தக்கவராவார் மற்றும் குற்றத்தீர்ப்பிற்குப் பின்னரும் மீறுகை தொடருமேயானால், மீறுகை தொடர்கிற ஒவ்வொரு நாளுக்கும், மேலும் நூறு ரூபாய் அபராதம் விதித்து தண்டிக்கப்படத் தக்கவராவார்.

**பி. அமுதா,**
*அரசு செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.